# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 10 | தமிழ் இலக்கியநயம் | நேரம் 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................

### பகுதி - I

*** முதல் 3 வினாக்களுக்கும், 4ஆம் வினாவில் விரும்பிய ஒரு வினாவுக்கும் விடை தருக.**

*(01) 1 தொடக்கம் 5 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.*

*01.* தனித்தமைந்த வீடடிற் புத்தகமும் நானும் சையோகம் புரிந்ததொரு வேளை தன்னில்
அ. இச்செய்யுட்பகுதி இடம் பெறும் இலக்கியம் யாது?
ஆ. சையோகம் என்பதன் பொருள் யாது?

*02.* அமுதம் போல் செந்தமிழிற் கவிதை நூல்கள்
அழகியவாம் உரைநடையில் அமைந்த நூல்கள்
அ. இவ் அடியில் வரும் அணியினை விளக்குக.
ஆ. இச் செய்யுட் பகுதியில் கூறப்பட்ட நூல்களின் வகைகளைத் தருக.

*03.* பத்தி எழுத்துக்களின் காரணமாக கவிக்கோ அப்தல் ரஹ்மான் பத்தியாளர் என அழைக்கப்படுகின்றார்.
அ. பத்தி எழுத்து என்றால் என்ன?
ஆ. கவிக்கோவின் இலக்கியங்கள் சிலவற்றைத் தருக.

*04.* உலகில் வன்மையானது நீண்ட காலம் நிலைத்திருக்க மாட்டாது வெண்மையானது அழிவடையாது தீர்க்காயுசுடன் நிலைத்திருக்கும்.
அ. இக் கூற்றைக் கூறிய அறிஞர் யார்? அவரின் நாட்டைச் சேர்ந்தவர்?
ஆ. இதில் மாறாக "வலிமையானதே வாழும்" என்று கூறிய அறிஞர் யார்?

*05.* அயலும் புடையும் வாழ வேண்டும்
அ. நாட்டார் பாடல்கள் என்றால் என்ன?
அதன் மறு பெயர்களைத் தருக?
ஆ. மருத்துவிச்சி என்பவள் யார்?

(5 x 5 = 25 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

## பகுதி – II

**(02) ∗ கீழ்காணும் செய்யுள் பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

தனித்தமைந்த வீட்டிற் புத்தகமும் நானும்
சையோகம் புரிந்ததொரு வேளை தன்னில்
இனித்தபுவி இயற்கையெழில் எல்லாம் கண்டேன்.
இசை கேட்டேன், மணம் மோந்தேன், சுவைகள் உண்டென்
மனிதரிலே மிக்குயர்ந்த கவிஞர் நெஞ்சின்
மகாசோதியிற் கலந்த தெனது நெஞ்சம்
சனித்ததநுகே புத்துணர்வு! புத்தகங்கள்
தருமுதவி பெரித! மிகப் பெரிது கண்டீர்!

மனிதரெலாம் அன்புநெறழ காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணத் வதற்கும்,
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்,
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை
புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்

01. கவிஞர் புத்தக வாசிப்பில் மூழ்கிய போது எவற்றைக் கண்டதாகக் கூறுகின்றார்?
02. கவிஞர் எவற்றைக் கேட்டு, நுகர்ந்து, உண்டதாகப் பாடுகின்றார்?
03. "நாட்டில் புத்தகசாலை யாண்டும் வேண்டும்" என கவி கூறுவதற்கான காரணங்கள் எவை?
04. சனித்தங்கே புத்தணர்வு! என்பதன் பொருள் யாது?
05. இச் செய்யுட் பகுதியிலே காணப்படும் இலக்கியச் சிறப்புக்களை விளக்குக.

(6 x 5 = 30 புள்ளிகள்)

**(03) ∗ கீழ்வரும் உரைப்பகுதியை வாசித்து தரப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

வாழ்க்கை என்பது போராட்டம் இதில் வலிமையானவையே வாழும் என்றார் டார்வின். ஆனால் சீன ஞானி கன்ஃபூஷியஸோ 'மெம்மையானவையே நீண்ட நாள் வாழும்' என்கிறார்.



kalvi.lk

கன்.ஃ.பூஷியஸ் மரணப்படுக்கயில் இருந்தார். படுக்கையைச் சுற்றி அவருடைய சீடர்கள் கண்களில் நீரோடு நின்று கொண்டிருந்தனலர். சீடர் ஒருவர் தழுதழுத்த குரலில் 'குருவே! கடைசியாக உங்களுக்கு அறிவுரை கூறுங்கள்' என்றார் '. கன்.ஃ.பூஷியஸ் வாயைத் திறந்து காட்டி என் வாயில் என்ன தெரிகிறது பார்! என்றார். சீடர் வாய்க்குள் பார்த்துவிட்டு நாக்கு தெரிகிறது என்றார். 'பற்கள் இருக்கின்றனவா' என்று கேட்டார் கன்.ஃ.பூஷியஸ் 'இல்லை' என்றார். சீடர் 'இதில் இருந்து என்ன தெரிகிறது? என்று கேட்டார் கன்.ஃ.பூஷியஸ்
'எனக்கு ஒன்றும் தெரியவில்லை நீங்களே சொல்லிவிடுங்கள்' என்றார் சீடர்.

நாக்கு மென்மையானது பல் வலிமையானது. நாக்கு பிறந்ததிலிருந்து இருக்கிறது. பல் பிறகுதான் பழக்கத்தால் முளைத்தது வயது முதிர முதிர என் பற்கள் விழுந்துவிட்டன நாக்கு அப்படியே இருக்கின்றது. நான் சாகும் வரை அப்படியே இருக்கும் இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் வலிமையானவை சீக்கிரம் அழிந்துவிடும். மென்மையானவை நீண்ட நாள் இருக்கும். எனவே நீங்கள் மென்மையானவர்களாக இருங்கள். நீண்ட வாழ்வீர்கள். இதுதான் உங்களுக்கு என் கடைசிச் செய்தி என்றார்.

Education

பழங்காலத்தில் போர் மூண்டால் 'முதியர்கள் பெண்கள் குழந்தைகள் பத்திரமான இடங்களுக்குச் சென்று விடுங்கள்' என்று அறிவிப்பார்கள். முதியவர்களையும், பெண்களையும், குழந்தைகளையும் அவர்களுடைய மென்மையே காப்பாற்றுகிறது.

கொடியவர்களையும் இசை மென்மையானவர்களாக்கி விடுகிறது.
பாலைப்பண், வழிப்பறிக் கொள்ளைக்காரர்களின் கொடிய மனத்தையும் மாற்றி ஆயுதங்களைக் கீழே போட்டுவிடச் செய்யும் என்கிறார். பொருநராற்றுப் படையில் முடத்தாமக் கண்ணியார்.

ஆறலை கள்வர் படைவிட, அருளின்
மறுதலை பெயர்க்கும் மருவின் பாலை

வன்மையின் வெற்றி அற்பமானது, மென்மையின் வெற்றி நுட்பமானது.

அ. இக்கட்டுரையில் டார்வின் என்பவருடைய கருத்து யாது?

ஆ. குரு – சீடன் உரையாடல் மூலம் வெளிப்படுத்தப்படும் கருத்து யாது?

இ. கன்.ஃ.பூஷயஸ் சீடர்களுக்கு கூறிய கடைசிச் செய்தி யாது?

ஈ. பழங்காலத்துப் போர் பற்றிக் கூறப்பட்டிருப்பது யாது?

உ. கொடிணயர்களையும் இசை மென்மையானவர்களாக்கிவிடும் என்பதை எவ்வாறு எடுத்துக்காட்டுகிறார்? கவிக்கோ

(6 x 5 = 30 புள்ளிகள்)



kalvi.lk

(04) பின்வருவனவற்றுள் விரும்பிய ஒரு வினாவுக்கு விடை எழுதுக.

01. அ. மரங்கள் மனிதனுக்கு எத்தகைய வழிகளில் பயன்படுகின்றன?
ஆ. ஆசிரியரின் உத்தியும் மொழி நடைச் சிறப்பும்

(15 புள்ளிகள்)

02. அ. மருத்துவிச்சியின் பரந்த நோக்கு வெளிப்படுமாற்றை கூறுக?
ஆ. குழந்தை எவ்வாறெல்லாம் வாழ வேண்டும் என மருத்துவிச்சி விரும்புகின்றாள்?

(15 புள்ளிகள்)

03. முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல் எனும் செய்யுளில் தலைவனிடத்தே தலைவி கொண்ட அன்பு எவ்வாறு வெளிப்படுகின்றது?

(15 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
ZOOM APP மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**